**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேவகோட்டை**

**முன்னிலை திருமதி.ரா.பிரேமி,B.A., LL.B(Hons).,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, தேவகோட்டை.**

**2026 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 17 ஆம் நாள் வியாழன் கிழமை**

**அசல் வழக்கு எண்: 85/2025**

CNR NO: TNSV060000892025

1. நாகராஜன்
2. தேன்மொழி

....வாதிகள்

/எதிர்/

1. சரவணன்
2. மகேஸ்வரன்
3. கனிதா
4. சாந்தி

....பிரதிவாதிகள்

இவ்வழக்கு கடந்த 02.07.2026-ம் தேதி என் முன்னிலையில் இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.சிவா அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் இவ்வழக்கில் தோன்றா தரப்பினர் ஆனதாலும், ஒரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களைப் பரிசீலினை செய்தும் இதுநாள் வரையும் இந்நீதிமன்றத்தில் பரிசீலீனைக்குட்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## தீர்ப்புரை

தாவாச் சொத்தாக பிராதுடன் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள BCEF மாதிரி வரைபடத்தில் 16 அடி அகலம் சுமார் 250 அடி நீளம் உள்ள சுமார் 4000 சதுர அளவுள்ள நஞ்சை நிலம் வாதிக்கு பாத்தியப்பட்டது என உரிமை விளம்புகை செய்தும், மேற்படி தாவாச் சொத்தான BCEF பகுதியில் இந்த பிரதிவாதிகள் ஆக்கிரமிப்புகள் செய்து அமைத்துள்ள மண்சாலையை இந்த பிரதிவாதிகள் நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் ஜே.சி.பி இயந்திரம் கொண்டு அவர்களது சொந்த செலவில் சுத்தம் செய்து நஞ்சை நிலமாக வாதிகள் வசம் சுவாதீனம் ஒப்படைக்க உத்தரவிட்டும், தவறும் பட்சத்தில் இந்த வாதியே தனது சொந்த செலவில் தாவாச் சொத்தான BCEF பகுதியில் இந்தபிரதிவாதிகள் செய்துள்ள மண்சாலையில் ஆன ஆக்கிரமிப்புகளை ஜே.சி.பி இயந்திரம் கொண்டு சுத்தம் செய்து நஞ்சை நிலமாக பயன்படுத்தும்வகையில் மாற்றம் செய்தும், அதற்கான செலவுத் தொகை முழுவதையும் இந்த பிரதிவாதிகள் வசம் வசூல் செய்யும் வகையில் சுவாதீன மீட்பு பரிகாரம் வழங்க கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வாதியின் வழக்குரையின் சுருக்கம் :**

(i). வாதி தரப்பில் தாவாச் சொத்தான சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், ஆலங்குடி கிராமத்தில் அமைந்துள்ள பட்டா எண்.590, சர்வே எண்.247/4 ஏ–ல் மொத்தம் 79 சென்ட் பரப்பளவுள்ள நஞ்சை நிலம் 13.12.1982–ஆம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரயப்பத்திரத்தின் மூலம் வாதிக்கு கிரயமாகப் பெற்ற சொத்து என்றும், அதன்பேரில் வாதி தனது பெயரில் பட்டா பெற்று, அரசுக்கு செலுத்த வேண்டிய வரி வகையறாக்களை முறையாகச் செலுத்தி, தொடர்ந்து

அனுபவித்து வருவதாகவும், அதனை நிரூபிப்பதற்காக கிரயப்பத்திரம், பட்டா, 10(1) பதிவு, கிராமப் புலப்படம், ஆன்லைன் கிராமப் புலப்படம், புகைப்படங்கள் மற்றும் இதர ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், வாதி 70 வயதுக்கு மேற்பட்டவர் என்பதால் தனது மகளும் பவர் ஏஜெண்டுமான தேன்மொழி மூலம் இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளதாகவும், தொழில் நிமித்தமாக சேலத்தில் வசித்து வந்தாலும் அவ்வப்போது கிராமத்திற்கு வந்து தாவாச் சொத்தில் விவசாயம் செய்து வந்ததாகவும், பிரதிவாதிகள் தாவாச் சொத்திற்குப் மேற்கே உள்ள சர்வே எண்.243–ல் வசிப்பவர்கள் என்றும், அவர்கள் அரசின் விதிமுறைகளை மீறி வாதிக்குச் சொந்தமான சர்வே எண்.247/4 ஏ–ல் வடபகுதியில் சுமார் 9.25 சென்ட் பரப்பளவில் ஆக்கிரமிப்பு செய்து மண்சாலை அமைத்துள்ளதாகவும், இதுகுறித்து கிராமத்தினரிடம் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து வாதி வருவாய்த் துறையினரிடம் அளவீடு கோரியபோது, சர்வேயர் ஆக்கிரமிப்பை உறுதி செய்ததாகவும், அதற்கான அளவீட்டு அறிக்கை மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இதுகுறித்து காவல்துறையில் புகார் அளிக்கப்பட்ட நிலையில், அது உரிமையியல் பிரச்சினை என்பதால் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடுமாறு காவல்துறையினர் அறிவுறுத்தியதாக கூறியுள்ளார்.

(ii). பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பப்பட்டும் அவர்கள் அதனைப் பெற மறுத்ததாகவும், கிராமத்தாரின் சமரச முயற்சிகளும் பலனளிக்கவில்லை என்றும், தாவாச் சொத்தாக பிராதுடன் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள BCEF மாதிரி வரைபடத்தில் 16 அடி அகலம் சுமார் 250 அடி நீளம் உள்ள சுமார் 4000

சதுர அடி அளவுள்ள நஞ்சை நிலம் வாதிக்கு பாத்தியப்பட்டது என உரிமை விளம்புகை செய்தும், மேற்படி தாவாச் சொத்தான BCEF பகுதியில் இந்த பிரதிவாதிகள் ஆக்கிரமிப்புகள் செய்து அமைத்துள்ள மண்சாலையை இந்த பிரதிவாதிகள் நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் ஜே.சி.பி இயந்திரம் கொண்டு அவர்களது சொந்த செலவில் சுத்தம் செய்து நஞ்சை நிலமாக வாதிகள் வசம் சுவாதீனம் ஒப்படைக்க உத்தரவிட்டும், தவறும் பட்சத்தில் இந்த வாதியே தனது சொந்த செலவில் தாவாச் சொத்தான BCEF பகுதியில் இந்தபிரதிவாதிகள் செய்துள்ள மண்சாலையில் ஆன ஆக்கிரமிப்புகளை ஜே.சி.பி இயந்திரம் கொண்டு சுத்தம் செய்து நஞ்சை நிலமாக பயன்படுத்தும்வகையில் மாற்றம் செய்தும், அதற்கான செலவுத் தொகை முழுவதையும் இந்த பிரதிவாதிகள் வசம் வசூல் செய்யும் வகையில் சுவாதீன மீட்பு பரிகாரம் வழங்க கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம் :</u>

1 முதல் 4 பிரதிவாதிகள் இவ்வழக்கில் தோன்றா தரப்பினர் ஆனதால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படவில்லை.

3. <u>வாதிகள் வழங்கிய சான்றுகள்</u>:–

**அ). வாய்வழிச் சான்றுகள்:–**

வாதிகள் தங்களது தரப்பை நிரூபிப்பதற்காக 1–ம் வாதியின் அதிகார முகவரை வா.சா.1 ஆக விசாரித்து, வா.சா.ஆ.1 முதல் 13 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்துள்ளார். மேலும் 1–ம் வாதியை வா.சா.2 ஆக விசாரித்து, அவரது தரப்பில் எந்த ஆவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**ஆ). ஆவணச்சான்றுகள்:—**

வாதிகள் தங்களது வழக்கை உறுதிப்படுத்த கீழ்கண்டவற்றை குறியீடு செய்துள்ளார்;

(I). 06.03.2025—ம் தேதியிட்ட வாதி பெயரில் ஏற்பட்டுள்ள 10(1) பட்டாவின் கணினி நகல் — அசல் — **வா.சா.ஆ.1** ஆகவும்,

(II). 07.03.2025—ம் தேதியிட்ட சர்வே எண்.247—க்கான கிராமப் புலப்படத்தின் கணினி நகல் — அசல் — **வா.சா.ஆ.2** ஆகவும்,

(III). 26.03.2025—ம் தேதியிட்ட காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகார் மனு மற்றும் அஞ்சலக ரசீதுகள் — அசல் — **வா.சா.ஆ.3** ஆகவும்,

(IV). 28.03.2025—ம் தேதியிட்ட வாதிக்கு வழங்கப்பட்ட புகார் மனு ஏற்புச் சான்று (மனு ரசீது எண்.99/2025) — அசல் — **வா.சா.ஆ.4** ஆகவும்,

(V). 07.06.2025—ம் தேதியிட்ட காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகார் மனுவின் கையிருப்பு நகல் — **வா.சா.ஆ.5** ஆகவும்,

(VI). தாவாச் சொத்தைக் காட்டும் மாதிரி வரைபடம் — அசல் — **வா.சா.ஆ.6** ஆகவும்,

(VII). 2—ம் வாதியின் ஆதார் அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது) — **வா.சா.ஆ.7** ஆகவும்,

(VIII). 16.05.2025—ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய அஞ்சலக ரசீதுகள் (4) — நகல் — **வா.சா.ஆ.8** ஆகவும்,

(IX). 1—ம் பிரதிவாதி பெற மறுத்து திருப்பி அனுப்பிய அஞ்சல் உறை — அசல் — **வா.சா.ஆ.9** ஆகவும்,

(X). 2—ம் பிரதிவாதி பெற மறுத்து திருப்பி அனுப்பிய அஞ்சல் உறை — அசல் — **வா.சா.ஆ.10** ஆகவும்,

(XI). 3–ம் பிரதிவாதி பெற மறுத்து திருப்பி அனுப்பிய அஞ்சல் உறை – அசல் – **வா.சா.ஆ.11** ஆகவும்,

(XII). 13.12.1982–ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரயப்பத்திரத்தின் அசல் – **வா.சா.ஆ.12** ஆகவும்,

(XIII). 19.04.2025–ம் தேதியிட்ட பணம் செலுத்தியதற்கான ஆன்லைன் ஒப்புகைச் சீட்டின் நகல் – **வா.சா.ஆ.13** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4. <u>பிரதிவாதிகள் வழங்கிய சான்றுகள்</u>:–**

**அ). வாய்வழிச் சான்று:–** இல்லை

**ஆ). ஆவணச்சான்று:–** இல்லை

**5. <u>இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய எழுவினா யாதெனில் வாதிகள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா என்பதே ஆகும் ?</u>:**

5(i). வாதி தாவா சொத்தான சர்வே எண் 247/4 ஏ தனக்கு 13.12.1982 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தின் மூலம் கிரைப் பாத்தியம் என்பதும், அதை தொடர்ந்து வாதி தாவா சொத்திற்கான வரிவகையறாக்களை செலுத்தி பட்டா பெற்று அனுபவம் செய்து வருவதாகவும், வாதிகள் தொழில் நிமித்தமாக சேலத்தில் வசித்து வருவதால் அவ்வப்போது தங்களது பூர்வீக ஊரான ஆலங்குடி கிராமத்திற்கு வந்து செல்வது வழக்கம் என்பதும், இந்நிலையில் இந்த பிரதிவாதிகள் சர்வே எண் 243–ல் வசித்துக் கொண்டு, வாதிகளுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தான சர்வே எண் 247/4 ஏ–ல் சுமார் 250 அடி நீளத்திலும் 16 அடி அகலத்திலும் மண்ணால் ரோடு அமைத்து வாய்க்காலை அழித்தும், ஆக்கிரமிப்பு செய்ததாகவும் அதை தொடர்ந்து

வாதிகள் 19.04.2025–ல் தேவகோட்டை வட்டாட்சியரிடம் மேற்படி ஆக்கிரமிப்பு சம்பந்தமாக மனு கொடுத்ததாகவும், அதை தொடர்ந்து சர்வேயர் மேற்படி ஆக்கிரமிப்புகளை அளந்து கொடுத்ததாகவும், அது சம்பந்தமாக காவல்துறையில் புகார்கள் கொடுக்கப்பட்டதாகவும் அதனால் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்ததாகவும் கூறியுள்ளார். எனவே வாதி கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்பதை நிரூபிப்பதற்கான மெய்ப்பிக்கும் சுமை வாதியின் மீது உள்ளது.

5(ii). வாதிகள் தங்களது வழக்கை நிரூபிப்பதற்காக 1–ம் வாதியின் அதிகார முகவரான 2–ம் வாதியை வா.சா.1 ஆக விசாரித்தும், அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்துள்ளனர். மேலும் 1–ம் வாதியை வா.சா.2 ஆக விசாரித்து, அவர் மூலம் ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. வா.சா.1. ஆன 2–ம் வாதி தனது முதல் விசாரணையில் தாவா சொத்து தனது தந்தையான 1–ம் வாதிக்கு 13.12.1982 தேதிய பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தின் மூலம் பாத்தியப்பட்டது என்றும், மேற்படி கிரைய தேதியிலிருந்து வாதிகள் தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதாகவும், இந்நிலையில் வாதிகள் தொழில் நிமித்தமாக வெளியூர் சென்றிருந்தபோது, பிரதிவாதிகள் தாவா சொத்தில் 250 அடி நீளத்திலும், 16 அடி அகலத்திலும் ஆக்கிரமிப்பு செய்து, வாய்க்கால்களை அழித்து உள்ளதாகவும், அதை தொடர்ந்து வாதிகள் பல்வேறு தரப்பில் மனுக்கள் மற்றும் புகார்கள் கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் தாவா சொத்தில் பிரதிவாதிகள் 9.25 சென்ட் அளவில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சர்வேயர் அளந்து காண்பித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் வா.சா.2 தனது முதல்

விசாரணையில் தாவா சொத்தான சர்வே எண் 247/4ஏ மொத்த விஸ்தீரணம் 79 சென்ட் அளவுள்ள நஞ்சை நிலம் தனக்கு கிரைய பாத்தியப்பட்டது என்றும், அதனை தொடர்ந்து வாதிகள் தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதாகவும், இந்நிலையில் வாதிகள் தொழில் நிமித்தமாக வெளியூர் சென்றிருந்தபோது, பிரதிவாதிகள் மேற்படி தாவா சொத்தில் 9.25 சென்ட் அளவிற்கு மண் சாலை அமைத்து ஆக்கிரமிப்பு செய்ததால் தான் தேவகோட்டை வட்டாட்சியரிடம் மனு கொடுத்ததாகவும், மேலும் தாவா சொத்தை அளந்ததில் மேற்படி 9.25 சென்ட் அளவிற்கு ஆக்கிரமிப்பு இருப்பதை சர்வேயர் அளந்து காண்பித்தார் என்றும், அதை தொடர்ந்து தாவா சொத்து சம்பந்தமாக காவல்துறையில் புகார் கொடுத்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியும், பின்பு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சி வைத்துள்ளார்.

5(iii). வா.சா.ஆ.1 ஆவணமான 10(1)–ஐ பரிசீலிக்கையில் தாவா சொத்தான சர்வே எண் 246/4ஏ மொத்த விஸ்தீரணம் 32 ஏர்ஸ் அளவிற்கு 1–ம் வாதியான முனியாண்டி மகன் நாகராஜன் பெயரில் பட்டா தாக்கல் ஆகியிருப்பது தெளிவாகிறது. வா.சா.ஆ.2 ஆவணமான புல எண் 247–ன் வரைபடத்தை பரிசலீக்கையில் அதில் பிரதிவாதிகள் எந்த அளவில் ஆக்கிரமிப்புகள் செய்துள்ளார் என்று காண்பிக்கப்பட்டுள்ளது தெளிவாகிறது. வா.சா.ஆ.3 ஆவணமான புகார் மனு மற்றும் ரசீதை பரிசீலிக்கையில் 2–ம் வாதியான தேன்மொழி என்பவர் இந்த பிரதிவாதிகள் மீது தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளது தொடர்பாக திருவேகம்பத்தூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களிடம் புகார் கொடுத்துள்ளது தெளிவாகிறது. வா.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலிக்கையில் அது மேற்படி புகாருக்கு வழங்கப்பட்ட புகார் மனு ஏற்பு ரசீது என்பது

தெளிவாகிறது. வா.சா.ஆ.5 ஆவணத்தை பரிசீலிக்கையில் மேற்படி 2–ம் வாதி, பிரதிவாதிகள் மீது தாவா சொத்து சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சனை தொடர்பாக திருவேகம்பத்தூர் காவல்நிலத்தில் புகார் கொடுத்திருப்பது தெளிவாகிறது. வா.சா.ஆ.6 ஆவணமாண மாதிரி வரைபடத்தை பரிசீலிக்கையில் அதில் எவ்வாறு பிரதிவாதிகள் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்பதை தெளிவாக காட்டியிருப்பது தெளிவாகிறது. வா.சா.ஆ.7 ஆவணம் 2–ம் வாதியின் ஆதார் அட்டை ஆகும். வா.சா.ஆ.8 ஆவணமான வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீதை பரிசீலிக்கையில் இந்த வாதிகள் தாவா சொத்து சம்பந்தமாக பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி உள்ளது தெளிவாகிறது. வா.சா.ஆ. 9 முதல் 11 ஆவணத்தை பரிசீலிக்கையில் மேற்படி வாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக் கொள்ளாமல் திருப்பி அனுப்பியது தெளிவாகிறது. வா.சா.ஆ.12 ஆவணத்தை பரிசீலிக்கையில் அது 13.12.1982 தேதிய பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் என்பதும், அதில் தாவா சொத்து ஆன சர்வே எண் 247/4–ல் மொத்த விஸ்தனமான 2 ஏக்கர் 38 செண்டில் மேல்புறம் 78 செண்டை இந்த வழக்கின் 1–ம் வாதியான முனியாண்டி தேவர் மகன் நாகராஜன் கிரையம் பெற்றிருப்பது தெளிவாகிறது. வா.சா.ஆ.13 அவணத்தை பரிசீலிக்கையில் 1–ம் வாதியான நாகராஜன் என்பவர் தாவா சொத்தான சர்வே எண் 247/4ஏ–வை அளப்பதற்கு மனு கொடுத்து அதற்கு உரிய கட்டணம் செலுத்தி இருப்பது தெளிவாகிறது.

5(iv). மேற்படி சாட்சிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலிக்கையில் தாவா சொத்தான சர்வே எண் 247/4ஏ அதன் விஸ்தீரணம் 32 ஏர்ஸ் மொத்தம் இந்த 1–ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்பது தெளிவாகிறது.

மேலும் வாதி தரப்பு சாட்சியங்கள், இந்த பிரதிவாதிகள் தாவா சொத்தில் ஆக்கிரப்பு செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே வாதிகள் தாவா சொத்து தங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதையும், அதில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்பதையும், தாங்கள் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபணம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இந்த நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையை பெற்றுக்கொண்ட 4–ம் பிரதிவாதி எந்தவித எதிர் வழக்குரையும் தாக்கல் செய்யவில்லை. மேலும் பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தில் தாங்கள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்பதை நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்கவோ அல்லது தங்களது தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்களை முன்னிறுத்தவோ முன் வரவில்லை. மேலும் வாதியின் இவ்வழக்கு பொய் என்று நிரூபிக்கும் பொருட்டு வாதி தரப்பு சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்யவும், இந்த பிரதிவாதிகள் முன்வரவில்லை. எனவே வாதிகளின் இவ்வழக்கு நிரூபிக்கப்பட்டதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆகவே வாதிகள் தங்களது வழக்கை நிரூபித்துள்ளதாகவும், எனவே அவர்கள் கோரிய பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

6. <u>முடிவு</u>:–

**முடிவாக, இவ்வழக்கு அனுமதிக்கப்படுகிறது. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யப்படுகிறது. மேலும் தாவா சொத்தில் இந்த பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்திருந்தால், அதனை இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றிக்கொண்டு வாதிகள் வசம் சுவாதீனத்தை ஒப்படைக்கும்படி இந்த பிரதிவாதிகளுக்கு உத்தரவிடப்படுகிறது. அவ்வாறு**

**ஆக்கிரமிப்புகளை அகற்றாதபட்சத்தில் வாதிகளே தங்களது சொந்த செலவில் மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றிக் கொண்டு அதற்கான செலவை பிரதிவாதிகளிடம் பெறலாம் என்று உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து பார்க்கப்பட்டு பிழைத் திருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஜுலை திங்கள் 17ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகிரப்பட்டது.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.07.17 17:43:17 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**தேவகோட்டை.**

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u>** :

வா.சா.1 – தேன்மொழி

வா.சா.2– நாகராஜன்

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

(I). 06.03.2025–ம் தேதியிட்ட வாதி பெயரில் ஏற்பட்டுள்ள 10(1) பட்டாவின் கணினி நகல் – அசல் – **வா.சா.ஆ.1** ஆகவும்,

(II). 07.03.2025–ம் தேதியிட்ட சர்வே எண்.247–க்கான கிராமப் புலப்படத்தின் கணினி நகல் – அசல் – **வா.சா.ஆ.2** ஆகவும்,

(III). 26.03.2025–ம் தேதியிட்ட காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகார் மனு மற்றும் அஞ்சலக ரசீதுகள் – அசல் – **வா.சா.ஆ.3** ஆகவும்,

(IV). 28.03.2025–ம் தேதியிட்ட வாதிக்கு வழங்கப்பட்ட புகார் மனு ஏற்புச் சான்று (மனு ரசீது எண்.99/2025) – அசல் – **வா.சா.ஆ.4** ஆகவும்,

(V). 07.06.2025–ம் தேதியிட்ட காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகார் மனுவின் கையிருப்பு நகல் – **வா.சா.ஆ.5** ஆகவும்,

(VI). தாவாச் சொத்தைக் காட்டும் மாதிரி வரைபடம் – அசல் – **வா.சா.ஆ.6** ஆகவும்,

(VII). 2–ம் வாதியின் ஆதார் அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது) – **வா.சா.ஆ.7** ஆகவும்,

(VIII). 16.05.2025–ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய அஞ்சலக ரசீதுகள் (4) – நகல் – **வா.சா.ஆ.8** ஆகவும்,

(IX). 1–ம் பிரதிவாதி பெற மறுத்து திருப்பி அனுப்பிய அஞ்சல் உறை – அசல் – **வா.சா.ஆ.9** ஆகவும்,

(X). 2–ம் பிரதிவாதி பெற மறுத்து திருப்பி அனுப்பிய அஞ்சல் உறை – அசல் – **வா.சா.ஆ.10** ஆகவும்,

(XI). 3–ம் பிரதிவாதி பெற மறுத்து திருப்பி அனுப்பிய அஞ்சல் உறை – அசல் – **வா.சா.ஆ.11** ஆகவும்,

(XII). 13.12.1982–ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரயப்பத்திரத்தின் அசல் – **வா.சா.ஆ.12** ஆகவும்,

(XIII). 19.04.2025–ம் தேதியிட்ட பணம் செலுத்தியதற்கான ஆன்லைன் ஒப்புகைச் சீட்டின் நகல் – **வா.சா.ஆ.13** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி</u> : இல்லை

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u> : இல்லை

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2026.07.17 17:42:57 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**தேவகோட்டை.**